LIBRARY
4 JAN 1963
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Monday, 29th October 1962.

The House met in the Assembly Chamber, Fort St. George, at eleven of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

I.—OBITUARY REFERENCE TO SRI S. LAZAR AND SRI J. L. P. ROCHE VICTORIA.

MR. SPEAKER : It is my painful duty to inform the House of the death on the 24th August 1962 at Tiruchirappalli of Sri S. Lazar, a Member of the former Madras Legislative Assembly during 1957--62 from Lalgudi Constituency. By way of expressing our sorrow at the demise and showing our respect to the departed soul, I request the hon. Members to stand in silence for a minute.

The House stood in silence for a minute.

MR. SPEAKER : Again it is also my painful duty to inform the House of the death on the 15th October 1962 at Tuticorin of Sri J. L. P. Roche Victoria, a former Minister of the Madras State and also a Member of the former Madras Legislative Assembly and Council. By way of expressing our sorrow at the demise and showing our respect to the departed soul, I request the hon. Members to stand in silence for a minute.

The House stood in silence for a minute.

II.—CONDOLENCE RESOLUTION ON THE DEATE OF DR. P. SUBBAROYAN.

MR. SPEAKER : I have also to inform the House with great sorrow of the death on 6th October 1962 at Madras of Dr. P. Subbaroyan, Governor of Maharashtra and a former Chief Minister of Madras from 1926 to 1930.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I beg to move the following Resolution for the acceptance of the House—

'This House places on record its deep sense of sorrow at the demise of Dr. P. Subbaroyan, Governor of Maharashtra. a former Chief Minister of Madras from 1926 to 1930 and conveys its deep sense of sympathy to the members of his bereaved family.'

கனம் சபாநாயகர் அவர்களே, டாக்டர் சுப்பராயன் அவர்களை அறியாதவர்கள் இந்த மன்றத்திலே யாரும் இல்லை. டாக்டர் சுப்பராயன் அவர்கள் இந்நாட்டுக்குச் செய்த சேவை நீண்டகாலத் தியச் சேவையாகும். பல துறைகளிலே அவர்கள் அரிய சேவை செய்திருக்கிறார்கள். அவர்கள் இந்த நகரத்திலே படித்துத் தேறி, அதற்குப் பிறகு மேனாட்டுக்குச் சென்று லண்டனிலுள்ள

பல்கலைக்கழகத்திலும், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்திலும் படித்துத் தேறினர். அவர் அங்கே வழக்கறிஞர் பட்டம் பெற்ருர். வழக்கறிஞர் படிப்பு உயர்ந்த படிப்பு. லண்டனிலே படித்து, வழக்கறிஞர் பட்டத்தோடு இந்தியா திரும்பி வந்தார்.

ஆதி முதற்கொண்டு அவர்கள் படித்து முடித்த உடனேயே தேசியவாதியாகி, உணர்ச்சி மிகுந்து, நாட்டின் பணியிலே ஈடுபட்டார். எனக்கு நினைவு இருக்கிறது, அவர்கள் இங்கிலாந்திலே படிப்பதற்குப் போயிருந்தபோது—அப்போது 1917-ம் ஆண்டு என்று நினைக்கிறேன்—அப்பொழுது ஹோம் ரூல் இயக்கம் நடந்துக்கொண்டிருந்தது. இந்த நாட்டிற்குச் சுதந்திரம் பெற ஹோம் ரூல் இயக்கத்திற்கு நிதி திரட்டப்பட்டுக் கொண்டிருந்த அப்பொழுது இங்கிலாந்திலிருந்தே டாக்டர் சுப்பராயன் அவர்களும், அவர்களுடைய மனைவியாரும், தலா 500 ரூபாய் அங்கிருந்து கேபிள் செய்து ஹோம் ரூல் இயக்கத்திற்கு நிதி அனுப்பியதை அப்போது நான் மாணவனுக இருந்தபோது, பத்திரிகையில் பார்த்தது நினைவு இருக்கிறது.

ஆதி முதற்கொண்டு அவர்கள் தேசியவாதியாகவே இருந்தார். 1920-ம் ஆண்டிலேயே அவர்கள் காங்கிரஸ் ஸ்தாபனத்திலே சேர்ந்தார்கள். சட்ட மன்றத்திலே நீண்டகால அனுபவம் அவர்களுக்கு இருந்தது. 'தலைசிறந்த பார்லிமெண்டேரியன்' என்று அவரை நாம் பெருமையோடு சொல்லலாம். நாம் சுதந்திரம் அடைவதற்கு முன்பு இருந்த, பழைய சட்ட மன்றத்திலே, அப்பொழுது மாநில சுயாட்சிகூட பரிபூரணமாக ஏற்படவில்லை, பாதி சுயாட்சிதான் இருந்தது, அப்பொழுது அவர்கள் அங்கத்தினராக இருந்ததுமட்டுமல்லாமல் ஒரு முறை முதல் அமைச்சராகவும் இருந்தார்கள். முதல் அமைச்சராக இருந்து சிரிய பணி புரிந்தார்கள். பின்னர் அதே பழைய சட்டமன்றத்தில் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராகவும் வீற்றிருந்தார். அப்பொழுதும் அவருடைய திறமை எல்லோருக்கும் வெளிப்பட்டது. டாக்டர் சுப்பராயன் அவர்கள் 'யுனைடட் நேஷனலிஸ்ட் பார்ட்டி' (ஐக்கிய தேசிய கட்சி) என்ற பெயரில் எதிர்க்கட்சி ஒன்றை அமைத்து அதில் எல்லோரையும் சேர்த்து வைத்து அந்தக் கட்சிக்குத் தலைவராக இருந்தார்கள்.

பின்னல் மாநில சுயாட்சி ஏற்பட்ட பிறகு, அவர்கள் முதன் முதலாக இந்த மாநிலத்தின் கல்வி அமைச்சராக 1937-ல் பொறுப்பு ஏற்றுப் பணியாற்றினர். அதற்குப் பிறகு, சட்ட அமைச்சராகவும் அவர்கள் அந்தக் காலத்திலே இருந்தார்கள். பின்னல் சத்தியாக்கிரக இயக்கம்—தனிப்பட்டோர் இயக்கம்—நடந்தது. அந்த இயக்கத்திலும் சேர்ந்து சிறைக்கும் சென்ருர்கள். அவ்வாறு பணிபுரிந்ததோடு பின்னல் நாம் சுதந்திரம் அடைந்த பிறகு, அரசியல் நிர்ணய சபையிலே அங்கத்தினராக இருந்து சிறந்த பணி புரிந்தார்கள். முதன் முதலாக நாம் சுதந்திரம் அடைந்து, மாநில ஆட்சி இங்கே அமைக்கப்பட்ட கொஞ்ச காலத்திற்குள்ளேயே—ஓர் ஆண்டுக்குள்ளேயே—டாக்டர் சுப்பராயன்

29th October 1962] [திரு. எம். பக்தவத்சலம்]

அவர்கள் உள்நாட்டு அமைச்சராகப் பணியாற்றியதும், இந்த மன்றத்தின் கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். அங்கே அரசியல் நிர்ணய சபையிலும் அங்கத்தினராக இருந்து சிறந்த பணி புரிந்தார். மத்திய ஆட்சியிலும் போக்குவரத்து அமைச்சராக இருந்து பல நல்ல பணிகள் புரிந்தார்கள். இப்பொழுது தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டம் ஏற்றுக்கொள்ளப் பட்டு, வேலை தொடங்கி இருக்கிறது என்றால், அதற்குப் பெரிதும் பொறுப்பு எடுத்துக்கொண்டு, அக்கறை எடுத்துக்கொண்டு, அதைச் சிறந்த திட்டமாக ஆக்கியவர் டாக்டர் சுப்பராயன் அவர்கள் என்பதும் நமக்கெல்லாம் தெரியும். அம்மாதிரி டாக்டர் சுப்பராயன் அவர்கள் ஒரு தேசியவாதி, சிறந்த நாட்டுப் பற்று உடையவர், அதோடு சிறந்த நிர்வாகத் திறனும் பெற்றிருந்தார். முதலமைச்சராகவும், உள்நாட்டு அமைச்சராகவும், சட்ட அமைச்சராகவும், மத்திய ஆட்சி அமைச்சராகவும் இருந்து, சமீபத்திலே அவர்கள் இறந்தபோது, மகாராஷ்டிர கவர்னராக இருந்தார்.

இப்போதுள்ள மகாராஷ்டிர முதல் அமைச்சர் அவர்கள், டாக்டர் சுப்பராயன் அவர்களே வேண்டுமென்று விரும்பினார்கள் என்பது எனக்குத் தெரியும். இந்தப் பக்கத்திலே உள்ள ஒரு அறிஞர் வேண்டுமென்று அவர்கள் கூறினார்கள். அது டாக்டர் சுப்பராயனை இருக்கவேண்டுமென்று அவர்களே விரும்பி, அவரை கவர்னராகப் பெற்றார்கள். டாக்டர் சுப்பராயன் அவர்களின் மறைவு நமக்கு எப்படி ஒரு பெருத்த நஷ்டம் என்று நாம் வருந்துகிறோமோ, அதேபோல், மகாராஷ்டிர மாநிலத்திற்கும் பெரியதொரு நஷ்டமாகும்.

இவ்வாறெல்லாம் பல துறைகளிலே அவர்கள் பணியாற்றியதோடு, இந்தோனேஷியாவிலே நம்முடைய நாட்டின் தூதராகவும் பணியாற்றினார்கள். தம்முடைய தாய் மொழியான தமிழிலே தமக்கு மிகுந்த பற்று உண்டு என்று அவர் பெருமையோடு சொல்லிக்கொள்வார். 'நான் தமிழ்ச் சங்கப் பரீட்சையிலே தேறினவன்' என்று அடிக்கடி அவர்கள் சொல்லிக்கொள்வதுண்டு. அப்படி அவருக்கு நம்முடைய தாய்மொழியான தமிழில் அளவு கடந்த பற்று இருந்தாலும், ஆங்கிலத்திலும் அவருக்குப் பற்று இருந்தது. நம்முடைய மாணவ மாணவிகள் அறிவு, ஆராய்ச்சி சம்பந்தமாக வளர்ச்சி பெற வேண்டுமென்றால் அதற்கு ஆங்கிலம் கற்பது முக்கியமானது; ஆங்கிலமொழி மாணவ மாணவிகளுக்கும், நாட்டுக்கும் மிகுந்த பயன் அளிக்கக்கூடியது என்பதையும் அவர்கள் உணர்ந்து வற்புறுத்திக்கொண்டு வந்தார்கள். இந்த நாட்டின் ஒருமைப்பாட்டிலும் மிகுந்த நம்பிக்கையும், அக்கறையும், உற்சாகமும் கொண்டவர்கள். அவர்கள் சென்னைக்கு நோய் வாய்ப்பட்டு வந்திருந்தபோது நான் போய்ப் பார்த்தவுடன் இதைத்தான் பேசிக் கொண்டிருந்தார். அவர் உடல் நிலையைப் பற்றி நான் விசாரித்தபோதும்கூட அதற்குப் பதில் சொல்லாமல், நாட்டின் ஒருமைப்பாட்டைப்பற்றித்தான் திரும்பத் திரும்ப அவர் பேசிக் கொண்டிருந்தார்.

[திரு. எம். பக்தவத்சலம்] [29th October 1962

அவர் சிறந்த சமூக சீர்திருத்தவாதி என்பதைப் பற்றி நான் எடுத்துக் கூற வேண்டியதில்லை. மேடைப் பேச்சிலே மட்டு மல்லாமல், தம்முடைய வாழ்க்கையிலேயும் இதை நடத்திக் காட்டியவர் டாக்டர் சுப்பராயன் அவர்கள் என்பது கனம் அங்கத் தினர்கள் எல்லோருக்கும் தெரியும். அவர்கள் ஒரு ஜமீந்தாராக இருந்தார்கள்—சிறந்த ஜமீந்தார் குடும்பத்திலே பிறந்து, கொஞ்ச காலம் ஜமீந்தாராகவே இருந்தார்கள். பிறகு ஜமீன் எல்லாம் ஒழிக்கப்பட்டது. இந்த மன்றத்திலேயே முன்பு ஒரு சட்டம் செய்யப்பட்டது. அந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டிய வராக இருந்தார் டாக்டர் சுப்பராயன் அவர்கள். தான் ஜமீந் தாராக இருந்தபோதிலும், ஜமீனை ஒழிப்பது தமக்குப் பாதகமாக இருக்கும் என்ற ஒரு குறுகிய நோக்கம் கொள்ளாமல், அதனால் நாட்டிற்கு நலம், குடியானவர்களுக்கு நலம், விவசாயிகளுக்கு நலம் என்பதை உணர்ந்து மிகுந்த ஊக்கத்தோடு உற்சாகத்தோடு டாக்டர் சுப்பராயன் அவர்கள் தாமே முன்நின்று அதைச் சட்ட மாக்கினர்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

மொத்தத்திலே டாக்டர் சுப்பராயன் அவர்கள் அனைவருக்கும் சிறந்த ஒரு நண்பர். அவர்களுக்கு எதிரி என்று யாரும் கிடை யாது. அவர்கள் சிறந்த ஒரு தேசியவாதி. சிறந்த கட்சிவாதி என்றுகூட சொல்லலாம். காந்தீயத்திலே ஆழ்ந்த பற்று கொண்ட வர்கள்; நம்பிக்கை உள்ளவர்கள். இவ்வளவு உறுதியான பற்று அவர்களுக்கு அரசியல் போக்கிலே உண்டு என்றாலும், டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கு விரோதி என்று சொல்வதற்கு யாரும் இல்லை. எல்லோருடனும் சேர்ந்து பழகுவார். சிலசமயம் சட்ட சபையிலே கொஞ்சம் காரசாரமாகப் பேசி இருக்கலாம். அதைப் பற்றிக் கொஞ்சமும் அவர்கள் மனதிலே வைத்துக் கொள்ள மாட்டார்கள். மற்ற எதிர்க்கட்சித் தலைவர்களோடு, தொண்டர் களோடு, சிறந்த ஓர் நண்பராகவே அவர் பழகிக் கொண்டு வந்தார்கள். இவர்கள் எப்படிப் பழகினர்களோ, அதேபோல் எதிர்க்கட்சித் தலைவர்களும், தொண்டர்களும் இவரிடம் பழகிச் கொண்டு வந்தார்கள். எல்லோருக்கும் டாக்டர் சுப்பராயன் என்றாலே, 'அவர்கள் வேறு கட்சி, தாங்கள் வேறு கட்சி', என்கிற எண்ணமே தோன்றாது; இருக்காது. டாக்டர் சுப்பராயன் காந்தீயத்திலே ஆழ்ந்த நம்பிக்கை உள்ளவர்கள். அப்படி இருந் தாலும் ,பிறரிடத்தில் வெறுப்பு கொண்டு பேசுவதில்லை. ஆனால், தன் உள்ளத்திலே இருக்கும் நம்பிககையின் காரணமாக எதையும் உறுதியாகப் பேசுவார்கள், எடுத்துக் கூறுவார்கள். அப்படி எடுத்துக் கூறி, சில போக்குகளைக் கண்டிப்பார்கள். இருந்தாலும், யாருக்கும் அவரிடத்திலே வெறுப்பு என்பதே கிடையாது.

அதேமாதிரிதான் அவர்கள் கடமை உணர்ச்சி மிகுதியாகக் கொண்டவர்கள். ஒரு பொறுப்பை ஏற்றுகொண்டால், அந்தப் பொறுப்பைத் தவறாமல் செய்யவேண்டும் என்ற உறுதி கொண்ட வர்கள். இப்போது, உடல்நோய் காரணமாக அவதிப்பட்டுக் கொண்டு இருந்த காலத்திலும்கூட, பூனாவிலே பல்கலைக்கழக கான்வகேஷன் உரையாற்றுவதற்காக அவர்கள் அங்கே போன

29th October 1962] *[திரு. எம். பக்தவத்சலம்]*

போது 'உட்கார்ந்துகொண்டு பேசலாம்' என்று அவர்கள் சொன்ன போதும்கூட இவர், 'அது மரியாதை அல்ல' என்று தம்முடைய உடல்நலனைக்கூடப் பாராமல் நின்றுகொண்டே கான்வகேஷன் உரையை நிகழ்த்தினர்கள். அவ்வாறெல்லாம் அவர்கள் கடமை உணர்ச்சியோடு தாம் ஏற்றுக் கொண்ட எந்தக் காரியத்தையும் செய்து முடிப்பார்கள்.

அவர்கள் குடும்பத்திலேயே வேறு வேறு அரசியல் போக்குள்ள வர்கள், கருத்து உள்ளவர்கள், ஆழ்ந்த கருத்து மாறுபாடு உடையவர்கள் எல்லாம் உண்டு என்பது நமக்கெல்லாம் தெரியும். அவர்களுக்கு கடமை உணர்ச்சி ஆழ்ந்து இருந்தது என்றாலும், குடும்பத்திலே அவர்களுக்குப் பாசமும் என்றும் குறையவில்லை. குடும்பப் பாசமும் அதிகமாய் இருந்தது. கடமையுணர்ச்சியும் குடும்பத்திலே பாசமும் சேர்ந்து இருந்ததில் முரண்பாடு ஒன்றும் இல்லை. டாக்டர் சுப்பராயன் அவர்கள் அரசியலைப் பொறுத்த மட்டில் தம்முடைய கருத்துக்கு ஒன்றும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். அது யாராக இருந்தாலும் சரி, சொந்த மகனை இருந்தாலும், சொந்த மகளாக இருந்தாலும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். ஆனல், இதற்காக மகளிடத்திலோ, மகனிடத்திலோ கொஞ்சமும் அவருக்குப் பாசம் குறையவில்லை. அதேபோல் குழந்தைகளுக்கும் அவர்களிடத்திலே எப்போதும் பாசம் குறைந்ததில்லை. இதையெல்லாம் நான் கவனித்திருக்கிறேன். அவர்கள் குடும்பத்திலே உள்ளவர்கள் வேறு கட்சியிலே கருத்து கொண்டவர்களாக, ஆழ்ந்த போக்கு உடையவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்களே என்பதற்காக அவர்களிடத்திலே எல்லாம் பாசம் சற்றும் குறையவில்லை.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக அவர் சில ஆண்டுகள் சீரிய தொண்டாற்றியிருக்கிறார்கள். தொடர்ந்து அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலே, மாநில காங்கிரஸ் கமிட்டியிலே அங்கத் தினராக இருந்து பெரும் பங்கெடுத்துக் கொண்டதோடுகூட, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராகவும் இருந்தார்கள். அந்தச் சமயத்திலே பார்லிமெண்டிற்கு ஒரு உப தேர்தல் வந்தது. டாக்டர் சுப்பராயன் அவர்களின் மகள் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே பார்லிமெண்டு ஸ்தானத்திற்கு நின்றார்கள். அப்போது நடந் ததைப் பார்த்தபோது, எனக்கு இது மனதை உருக்கியது. டாக்டர் சுப்பராயன் அவர்கள் ஊர் ஊராகப் போய் 'தன்னுடைய மகளுக்கு வோட்டுக் கொடுக்கக்கூடாது, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரைத்தான் ஆதரிக்க வேண்டும்' என்று பேசினர்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் ஒன்றும் இவருக்கு உறவு இல்லை. இருந்தும், தன் மகளுக்கு எதிராக காங்கிரசுக்கு ஆதரவு கொடுக்குமாறு கோவை, உதகை, நீலகிரி போன்ற இடங் களுக்கெல்லாம் சென்று பிரசாரம் செய்தார்கள். அப்படிப் போகும்போது, இரண்டு பேரும் எதிரே சந்திப்பார்கள். அப் போதும் கொஞ்சம்கூட விட்டுக் கொடுக்கவில்லை. இப்படி அவர்கள் தம்முடைய கடமை உணர்ச்சி குன்றாமல் தொண்டாற்றினர்கள்.

[திரு. எம். பக்தவத்சலம்] [29th October 1962

எனக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. அதை இந்தச் சமயத்திலே சொல்லலாம் என்று நினைக்கிறேன். டாக்டர் சுப்பராயன் அவர்களுடைய மனைவியார் அவர்களும் சிறந்த காங்கிரஸ்வாதி. அவர்களுடைய மருமகள், அதாவது அவருடைய மகளுடைய கணவன்மீது, அப்போது ஏதோ வாரண்டு இருந்தது. அரஸ்டு செய்ய வேண்டிய வாரண்டு. ஆனல் அவர் அன்டர்-கிரவுண்டில் இருந்தார். வாரண்டுக்கு அகப்படவில்லை. அவர் அப்படி அன்டர்-கிரவுண்டில் இருக்கும்போது ரொம்பக் கடுமையான காய்ச்சல் வந்துவிட்டது. டைபாயிடு என்று நினைக்கிறேன். அப்போது அவர்கள் ஒரு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற வேண்டியிருந்தது. ஆனல் அன்டர்-கிரவுண்டில் இருந்ததால், போலீசாருக்குத் தெரியாது. திருமதி ராதாபாய் சுப்பராயன் அவர்கள் துணிவு உள்ளம் படைத்தவர்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அப்போது அவர்கள் என்னிடம் வந்தார்கள். ரொம்ப வருத்தத்தோடு வந்தார்கள். அப்போது அவர்கள் மனம் கலங்கி பேசியது எனக்கு நினைவிருக்கிறது. என்னுடைய மனதை அது மிகவும் உருக்கியது. அவர்கள் என்னிடம் வந்து, "ரொம்ப ஆபத்தான, கவலைக்கிடமான நிலைமையிலே என்னுடைய மருமகன் இருக்கிறார், ஆனல் அண்டர் கிரவுண்டில் இருக்கிறார். ஆஸ்பத்திரியிலே சிகிச்சை பெற்று வருகிறார், எனக்கு அவரைப் போய்ப் பார்க்க வேண்டும், ஆனல் என்னுடைய கணவரிடம் இதைச் சொல்லுவதற்கு பயமாக இருக்கிறது, காரணம் அவர் உள்நாட்டு அமைச்சர், அவருக்குத் தெரிந்தால் என்னைக் கோபித்துக் கொள்வார், உடனே அவரை அரஸ்டு செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும், நீங்கள்தான் எதாவது யோசனை சொல்ல வேண்டும்" என்று கேட்டார்கள். அந்த நிலைமையைக்கூட கணவரிடம் சொல்வதற்கு அவர்கள் துணியவில்லை. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் டாக்டர் சுப்பராயன் அவர்களின் உயர்ந்த கடமை உணர்ச்சிக்கு, அதை எடுத்துக் காட்டாகத்தான் சொல்கிறேன்.

நான் அவர்களிடம் சொன்னேன், 'இது என்னோடு இருக்கட்டும், நீங்கள் போய்ப் பாருங்கள்' என்றேன். இதைத் தவருகவோ, குறையாகவோ கூற முடியாது. மனிதத் தன்மை உள்ளவர்கள் செய்யக்கூடியதுதான். காந்தி அடிகள்கூட இப்படி அண்டர்-கிரவுண்டில் இருந்த பலரைச் சந்தித்து இருக்கிறார்கள் என்பதை உணர்ந்தேதான் நான் நடந்து கொண்டேன். இதுவரை யாருக்கும் சொல்லவில்லை. சொல்ல வேண்டியவருக்கும் சொல்லவில்லை. அதை இன்றைக்குத்தான் சொல்கிறேன். இது எதை எடுத்துக் காட்டுகிறது என்றால், டாக்டர் சுப்பராயன் எத்தகைய உயர்ந்த கடமை உணர்ச்சி உள்ளவராகத் திகழ்ந்தார் என்பதையே காட்டுகிறது. அதோடு குடும்பப் பாசத்திலும் கொஞ்சம்கூட குறையவில்லை. இந்த இரண்டுக்கும் முரண்பாடு எற்படாமல் வாழ்க்கையை நடத்தி, பல வகைகளிலேயும் சிறப்பாக வாழ்ந்து, நமக்கெல்லாம் சிறந்த வழிகாட்டியாக விளங்கினர். அவரது வாழ்க்கை நமக்கு முக்கியமான பாடமாகும். அவர்கள்

நாட்டிற்குச் செய்த சேவை மகத்தானது. அவர்கள் மறைந்தது நம் நாட்டிற்கு பெருத்ததொரு நஷ்டம். நம்முடைய அனுதாபத்தை அவர்கள் குடும்பத்தாருக்கு தெரிவித்துக் கொள்ளும் வகையிலே இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவதைப் போல், சிறைச்சாலையிலே மறைந்த மாவீரர்களின் செய்தியோடு, டாக்டர் சுப்பராயன் அவர்களும் மறைந்து விட்டார்கள் என்ற செய்தி எங்கள் இதயத்தைத் தாக்கியது. அவருடைய மறைவுக்காக ஆளும் கட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத்திலே கொண்டு வந்திருக்கின்ற இரங்கல் தீர்மானத்தை, இதய ஆழத்தில் வெளிப்படுகின்ற அன்பின் அடிப்படையிலே பாச உணர்ச்சியோடும், முழு மனதோடும் நான் ஆதரிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அரசியல் பெருந்தகையாளர் டாக்டர் சுப்பராயன் அவர்கள் அந்தக் காலத்திலேயே அறிவியக்கத்திலே நல்ல ஈடுபாடு கொண்டு, அறிவியக்கத்தினுடைய தலைசிறந்த கொள்கையை கடைப்பிடித்து, அதிலும் முக்கியமாக ஆளும் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல் கலப்புத் திருமணம் செய்து கொண்டு, தன் வாழ்க்கையை சீரிய முறையிலே நடத்திய பெருந்தகையாளர் ஆவார்கள். கலப்புத் திருமணம் போன்ற சமுதாய சீர்திருத்தங்களிலே அவருக்குள்ள ஆழ்ந்த நம்பிக்கையை, அவருடைய பல்வேறு நடவடிக்கைகளிலே இருந்து நாடு நன்கு உணரும்.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் சமுதாய சீர்திருத்தத்திலே பற்று கொண்டது மாத்திரமல்ல. மொழியிலே நீங்காத பற்று கொண்டு, அதன் அடையாளமாக அவர்கள் தமிழகத்தைவிட்டு வடக்கே சென்று, அங்கே மத்திய அமைச்சராக ஆனாலும், அந்த நேரத்திலும்கூட அவர்களுடைய தமிழ்த் தொண்டு தமிழகம் முழுவதும் ஒளி வீச வேண்டுமென்றும், இந்தியத் துணைக் கண்டம் முழுதும் பரவ வேண்டுமென்றும் திருவள்ளுவர் படத்தையும், கவிச் சக்ரவர்த்தி பாரதியார் படத்தையும் அஞ்சல் தலைகளிலே வெளியிட்ட பெருமை டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கே உரியதாகும். பணவிடைத் தாள்களிலே தமிழ் மொழியைப் புகுத்துவதற்கு டாக்டர் சுப்பராயன் அவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் சிரமங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அவர் இன்றையத் தினம் மறைந்து விட்டாலும், அவருடைய காலத்திலே வெளியிட்ட திருவள்ளுவர் உருவ அஞ்சல் தலைகளும், பாரதியாருடைய உருவ அஞ்சல் தலைகளும், நம்முடைய கைகளிலே கிடைக்கும் பணவிடைத் தாள்களிலே ஒளிவிடும் அந்த தமிழ் மொழியும், அவர் இந்த நாட்டிலே நடத்திக் காட்டிய நிர்வாகத் திறனும் என்றென்றும் அழியாமல், மறைந்த மாவீரர் டாக்டர் சுப்பராயன் அவர்களின் திருவுருவம் நம்முடைய இதயத்திலே என்றென்றும்

[திரு. மு. கருணாநிதி] [29th October 1962

குடிகொண்டிருக்கும் என்று நம்புகிறேன். ஆளும் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், டாக்டர் சுப்பராயன் அவர்களே ஒரு அரசியல் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்றாலும், அவர் களுடைய மக்கள் வேறு ஒரு அரசியல் இயக்கத்தைக் கடைப் பிடிப்பதற்கு எந்தவிதத்திலும் அவர் தடையாக இல்லாமல், அவர் களுடைய அரசியல் பிரச்னைகளிலே தலையிடாமல், அவர்களைக் கண்டிக்காமல், அந்தக் குடும்பத்தில் அவரவர்களுடைய அரசியல் பிரச்னைகளுக்கு இடம் உண்டு என்ற வகையில், அவருடைய நல்ல பெருந்தன்மையை அவருடைய குடும்பத்திலிலேயே எடுத்துக் காட்டி, அந்தப் பெருந்தன்மையை நாட்டிலும் பரவ விடவேண்டும் என்று வழிவகுத்துக் காட்டிய பெரியவர் அவர். அப்படிப்பட்ட பெரியவரை நாம் இன்றையதினம் இழந்து மெத்த வேதனைக்கு உள்ளாகியிருக்கிறோம்.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் மறையும் தறுவாயில், மராட் டிய மாநிலத்தின் கவர்னராக இருந்துவந்தார். தமிழகத்திலே அவர் செய்து காட்டிய ஆற்றலையும், அவர் பெற்றுள்ள அறிவு மேம்பாட்டையும், அவர் கொண்டுள்ள நாட்டுப் பற்றையும் மராட் டிய மாநிலத்தில் பரப்புகிற நேரத்தில் திடீரென்று கலம் கடலில் கவிழ்ந்தது போல் டாக்டர் சுப்பராயன் அவர்கள் மறைந்து விட்டார் என்கின்ற சோகச் செய்தியை நாம் கேள்விப்பட நேர்ந் தது. அப்படிப்பட்ட பெரிய மனிதரை இழந்து தவிக்கிற அவருடைய குடும்பத்ினருக்கும், அவருடைய உற்றார், உறவின ருக்கும், அன்பர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகம் தன்னு டைய ஆழ்ந்த இரங்கலை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ளு கிறது என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள் கிறேன். வணக்கம்.

* திரு. சா. கணேசன் : கனம் சபாநாயகர் அவர்களே, தமிழ் நாட்டிலே குறிப்பிடத்தக்க ஒரு சிறந்த அரசியல்வாதியாக, நிர்வாகத்துறை அறிஞராக விளங்கி வந்த டாக்டர் சுப்பராயன் அவர்களுடைய மரணம் சிறப்பாக தமிழகத்திற்கும், பொதுவாக இந்திய தேசத்திற்கும் பெரிய நஷ்டம் என்பதை எல்லோரையும் போலவே நானும் உணர்கிறேன் ; அதற்காக வருத்தமும் அடை கிறேன்.

சட்டப் படிப்பு முடிந்து இந்தியா திரும்பியதும் அவர் முழுக்க முழுக்க அரசியலில் ஈடுபட்ட ஒரு பெரியவர். ஆங்கில ஆட்சி காலத்திலே, ஆங்கில ஏகாதிபத்திய காலத்திலே சட்ட மன்றத் திலே முதல் அமைச்சராக, எதிர்க் கட்சித் தலைவராக எல்லாம் பணியாற்றினர். பின்னர் மாகாண சுயாட்சி வந்த பிறகும், சட்டம் கல்வி, போலீஸ் முதலிய துறைகளை ஏற்று, அமைச்சராக இருந்து அரும்பணியாற்றினர். அதற்குப் பின்னர் பூரண சுயாட்சி வந்த தற்குப் பிறகும், மந்திரியாக இருந்து, மாநிலத்திலும் மத்தியிலும் பொறுப்பேற்று, அரும்பணியைச் செய்தார். இறுதியில் மகா ராஷ்டிர மாநிலத்தினர் விரும்பியதற்கேற்ப அங்கு கவர்னர்

பதவியை ஏற்றுக்கொண்டார். இவை எல்லாம் அவருடைய அருமைப்பாட்டுக்கு, திறமைக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றவை.

சட்டம் பயின்றதும், அவர் மேற்கொண்ட பணியைப் பற்றி மிகப் பெருமையோடு அவர் சொல்லிக்கொள்ளுவார். முதல் யுத்த காலத்தில் இவர் பிரிட்டன் தலைமை அமைச்சருக்குச் செயலாளராகப் பணியாற்றினார். "இரவு 1½ மணி இருக்கும், தந்தி வந்தது. அதை முதலில் நான் தான் படித்தேன், படித்து நான் தான் அவருக்கு யுத்தம் நின்றது என்று போனிலே சொன்னேன்" என்று அவர் சொல்லி பெருமைப்பட்டுக் கொள்ளுவார். அவ்வளவு நல்ல அரசியல் துறையிலிருந்து தேறி வந்த காரணத்தினாலே, அவர் அனுபவ நிறைவு பெற்றவர்.

அவர் சட்டத் துறையிலும் மிகுந்த நுணுக்கங்களையெல்லாம் நன்கறிந்து கொண்டவர் என்பதை நம்மிலே பலர் அறிவார்கள். மாகாண சுயாட்சி காலத்தில் மதுவிலக்குச் சட்டம் கொண்டு வரப்பட்டபொழுது, ராஜாஜி அவர்கள் முதல் அமைச்சராக இருந்து, பல சட்ட நிபுணர்களையும், தமிழ் நாட்டிலுள்ள மேதைகளையும் அழைத்து வைத்துக்கொண்டு சிந்தித்த பொழுது, மிகச் சிறந்த மேதைகள் 'இப்பொழுது இருக்கிற சட்டத்தின் கீழேயே மது விலக்கை அமலுக்குக் கொண்டு வரலாம்' என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். டாக்டர் சுப்பராயன் அவர்கள் இதை முழுக்க முழுக்க மறுத்தார். 'கண்ட்ரோல்' என்ற சொல்லுக்குள்ளே 'டோடல் அபாலிஷன்' அடங்காது, 'அபாலிஷன்' என்ற சொல்லுக்குள்ளே வேண்டுமானால் 'கண்ட்ரோல்' அடங்கலாம் என்று சொன்னார். 'கண்ட்ரோல்' என்ற சொல்லுக்குள்ளே 'அபாலிஷன்' அடங்காது என்று மிக அழுத்தமாக வாதிட்டு, அதன் காரணமாக சென்னையில் புதுச் சட்டம் உற்பத்தி செய்யப்பட்டது. சென்னையில் செய்த சட்டம் எந்தக் கோர்ட்டிலும் நின்று தாக்குப் பிடித்ததையும், வேறு சில மாகாணங்களில் உள்ள சட்டம் கோர்ட்டுகளுக்கு வந்து தகர்க்கப்பெற்ற உண்மைகளையும் நாம் எல்லோரும் அறிவோம். வரலாற்று முறையிலே பணியாற்றுகின்ற நமக்கு அந்த உண்மைகள் தெரியும். அவர் இத்தகைய நுணுக்கமான அறிவு படைத்தவர். அதே காலத்தில் அவருடைய உடல் எவ்வளவு பெரியதோ, அதைவிடப் பெரியது அவர் மனம், அதைவிடப் பெரியது அவருடைய ஒழுக்கம். அவர் ஒழுக்கம் சிறந்தவராய் இருந்தமைக்குக் காரணம் அவர் தெய்வ நம்பிக்கை முழுக்க முழுக்க உடையவர். மத அனுஷ்டானத்திலே குறைவு இல்லாதவர். ஆனால் எந்த மதத்தையும் வெறுப்பவர் அல்ல. தினம் சுமார் அரை மணி நேரம் பிரார்த்தனை செய்யாமல் எதையும் தொடங்கியவர் இல்லை. அவருடைய பிரார்த்தனைக் கட்டுக்குள்ளே, கீதையைக் காண்போம், பைபிளைக் காண்போம், குரானைக் காண்போம், திருவள்ளுவரைக்கூட காண்போம், அற நூலாக இருந்தாலும், நீதி நூலாக இருந்தாலும், அதையும் காண்போம்.

[திரு. சா. கணேசன்] [29th October 1962

இப்படியெல்லாம் தன்னுடைய அறிவுக்கு மட்டும் பிராதான்யம் கொடுக்காமல் ஒரு நம்பிக்கைக்கும் பிராதான்யம் கொடுத்து வாழ்ந்த காரணத்தினுலே அவர் எல்லோருக்கும் நல்லவராக, சிறந்தவராக, உயர்ந்தவராக நமக்குக் காட்சி தந்தார்.

அதற்கு மேலே, அவருக்கு இந்த நாட்டிலே இவ்வளவு ககிப்புத் தன்மை எப்படி ஏற்பட்டது என்பதை நம்முடைய சபை முதல்வர் அவர்கள் கூறினுர்கள். வாழ்க்கையிலே எத்துணை முரண்பாடுகள் இருந்தாலும், அந்த முறண் பாடுகளினுல் உள்ளம் நைந்துவிடாமல், அதற்குள்ளேயே உடன்பாடு கண்டு வாழ்ந்த பெருமகன் அவர். இவைகளுக்கெல்லாம் அடிப்படைக்காரணமாக இருக்கவேண்டுமென்று நான் கருதுவது அவர் ஒரு நல்ல ஆட்டக்காரர், (Sportsman) அந்தத் துறையிலே விட்டுக் கொடுத்ததும், பிறருடைய சுகதுக்கங்களை உணருவதும், தன்னுடைய கருத்து எவ்வளவு விழுமியது என்று தான் நினைக்கின்ருனே ஒருவன், அதைப் போலவே பிறருடைய கருத்தும் அவ்வளவு சிறந்தது என்று மதிக்கின்ற உள்ளப் பாங்கும் காணப்படும். அவருக்கு இயல்பாக அமைந்த பேருள்ளம் இந்த ஆட்டத் துறையினுலே விரிவடைந்தது. எல்லாவற்றிக்கும் மேலாக அவர் உண்மையான மனிதனுக, மனித இதயம் படைத்தவராக இருந்து அருமையான பணி நாட்டிற்குச் செய்ததோடு, எல்லோரையும் சமநோக்கோடு காண்கின்ற பரந்த பேருள்ளம் படைத்தவராக விளங்கினுர். இத்தகைய ஒரு பெருமகனுக்கு உங்கள் எல்லோருடனும் கூட, நானும் எனது வணக்கத்தை சொந்த முறையினுலும், கட்சி சார்பாகவும், தெரிவித்துக்கொண்டு, நம்முடைய ஆழ்ந்த அனுதாபத்தை அவருடைய குடும்பத்தினருக்கு சமர்ப்பித்துக்கொள்ளுவோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சந்தர்ப்பத்தில் நான் என்ன சொல்ல விரும்பினேனுே, அவற்றில் பெரும்பாகத்தை இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்த கனம் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுவிட்டார்கள். டாக்டர் சுப்பராயன் அவர்கள் சிறு வயதிலிருந்தே நம்முடைய நாட்டிற்காக பொது சேவைக்காக தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்தவர் என்பது மட்டுமல்ல, அவர் குடும்பத்தையே நாட்டிற்காக அர்பணித்துள்ளார் என்று கூறினுல், அது மிகையாகாது என்பது என்னுடைய அபிப்பிராயம். சிறந்த, அதிக செல்வம் படைத்த குடும்பத்தில் பிறந்தவர் அவர். அவருடைய உறவினர்களுக்கு வயது ஆக ஆக அவருக்கு செல்வம் நிறையக் கிடைக்க வாய்ப்பு இருந்த ஒரு குடும்பத்தில் பிறந்தவர் அவர். நல்ல உயர்ந்த படிப்பு இருந்தும், பல சந்தர்ப்பங்களில் அதிகாரம் அவருடைய கையில் இருந்தும், தனக்காக, தன்னுடைய சுய நலத்திற்காக அதிகாரத்தையோ செல்வத்தையோ உபயோகப்படுத்தினுர் என்று ஒரு சந்தர்ப்பத்தைக் கூட நாம் கூற முடியாது. அவர் ஒரு சிறந்த தியாகி என்றே கூறவேண்டும். அவருக்கு அந்தப் பரந்த நோக்கம் இருந்ததினுல் தான், தன்னுடைய

29th October 1962] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எந்த அரசியல் கருத்தில் இருந்த போதிலும் கூட, அவர்களோடு அன்போடு பழகும் பெருந்தன்மை உடையவராக இருந்தார். கடந்த 20 ஆண்டு காலமாக நான் அந்தக் குடும்பத்தில் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் பெற்றவன். அவர்களோடும் சரி, அவர்களுடைய மனைவியார் ஸ்ரீமதி ராதா பாய் சுப்பராயன் அவர்களோடும் சரி, நெருங்கிப் பல சந்தர்ப் பங்களில் பேசுவது, அவர்கள் வீட்டிற்குப் போவது நல்ல அறிவு புகட்டுவதாக இருந்தது.

சிரித்த முகத்தோடு அவர் விவாதிக்கும் பண்பு உடையவர். 11-30 a.m. மகன், மகளுடன், அவர் அரசியலைப் பற்றி விவாதிப்பது பார்ப்பவர் களுக்கு வியப்பை அளிக்கும். அது, ஒரு தந்தை மகளிடத்தில் பேசுவதாகவோ, அல்லது மகன் தந்தையிடத்தில் பேசுவதாகவோ இல்லாமல், சமமான அந்தஸ்து இருக்கக்கூடிய இரண்டு நண்பர் கள் ஒருவருக்கொருவர் உரையாடுவதுபோல் இருக்கும். தந்தை யின் கருத்தை மகன் மீதோ அல்லது மகள் மீதோ சுமத்த வேண்டு மென்ற எண்ணமே அவரிடம் இருக்காது. அவர்களைவிட தான் அதிக அனுபவம் பெற்றவர் என்று நினைத்து அவர் விவாதித்ததை நான் பார்த்ததில்லை. கனம் அமைச்சர் அவர்கள் சில சந்தர்ப்பங் களைக் குறிப்பிட்டார்கள். மகளின் கணவன் உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்த காலத்தில்கூட அவருக்குத் தெரியாமல் தாயார் அதை ரகசியமாக வைத்திருந்து, அவரைப் பார்க்க விரும்பினார்கள் என்று சொன்னார். அதற்குச் சில மாதங்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சியை நான் குறிப்பிட விரும்புகிறேன். 1946-ல் மகளின் கணவனைச் சிறையில் வைத்திருந்தார். அப்பொழுது டாக்டர் சுப்பராயன் உள் நாட்டு அமைச்சராக இருந்தார். அவர் மகளின் கணவர் பாதுகாப்புக் கைதியாக வைக்கப்பட்டு, 1947, ஆகஸ்டு 15-ல் எல்லா அரசியல் கைதிகளும் விடுதலை ஆனபொழுதுதான் விடுதலை அடைந்தார். மகன், மகள் என்கிற வேற்றுமை இன்றி, விருப்புக்கு இடம் கொடுக்காமல், அவர் தமது கடமையைச் சரி வரச் செய்தார். அதேபோல் தான் அவருடைய மகனும், மகளும் தங்களுடைய கடமைகளைச் செய்து வந்தார்கள். 1952-ம் வருஷப் பொதுத் தேர்தலில் டாக்டர் சுப்பராயன் பார்லிமெண்ட் தொகு திக்கு அபேட்சகராக நின்றார். அவருடைய மனைவி சட்டசபைத் தொகுதிக்கு அபேட்சகராக நின்றார். அவர்கள் இருவரையும் எதிர்த்து, கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகருக்கு பிள்ளைகள் வேலை செய்தார்கள். பிரசாரம் செய்தார்கள். அவர் அவர்கள்மீது வெறுப்புக் கொள்ளவில்லை. மகள் கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சக ராக இருக்கும்பொழுது, அவர் காங்கிரஸ் கட்சிக்கு வேலை செய்தார். இப்படி அவர் நடந்துகொண்டது எந்த வகையிலும் குடும்ப உறவை பாதிக்கவில்லை. அந்த அளவுக்கு அவருக்கு பெரும் மனது இருந்தது. அவர் வகித்த பதவிகளைவிட தமிழன் எப்படி வாழவேண்டுமென்பதற்கு ஒரு உதாரணமாகத் திகழ்ந்தார் என்று சொன்னால் அது மிகையாகாது. மிகச் சிறந்த தமிழன், மிகச் சிறந்த குடும்பத் தலைவன், மிகச் சிறந்த இந்தியன் என்ற வகையிலே அவர் எல்லோருக்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்

கிறார். ஆட்சி மொழிக் குழுவிலே அவர் அங்கம் வகித்தபொழுது, நம்முடைய தேச ஒற்றுமைக்கு முக்கியமானது என்ன என்பதை —நாம் அப்படியே அதை ஒப்புக்கொள்ளாவிட்டாலும்கூட—அவர் சூசகமாக சுட்டிக்காட்டியிருக்கிறார். தேச ஒற்றுமை அவசிய மென்பதை அவர் வலியுறுத்தியிருக்கிறார். எந்தக் கருத்து உடைய வராக இருந்தாலும், மற்ற கருத்து உடையவர்கள் மீது எந்த விதமான ஆச்சரியமும் அவர் மனதுக்கே எட்டாது.

இவ்வளவு பெருந்தன்மையோடு கூடிய ஒரு சிறந்த தேசீய வாதியை நாம் இந்த சமயத்தில் இழந்தது தமிழ் நாட்டுக்கு மட்டு மல்லாமல், இந்தியா முழுமைக்கும் ஒரு பெரிய நஷ்டம் என்பது என்னுடைய அபிப்பிராயம். கனம் அமைச்சர் அவர்களும், மற்ற வர்களும் கூறிய கருத்துக்களோடு, நான் என்னுடைய கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொண்டு, அன்னாரின் குடும்பத்தினருக்கும் என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள் கிறேன்.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : கனம் சபாநாயகர் அவர் களே, கனம் அமைச்சர் அவர்கள் இந்த சபைமுன் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன்.

காலம் சென்ற டாக்டர் சுப்பராயன் அவர்கள் எவ்வளவு சீரிய மனம் படைத்தவர்கள் என்பதை எனக்கு முன்பு பேசிய அங்கத் தினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அவர்கள் ஒரு சிறந்த காந்தியவாதி என்பதைக் குறிப்பிட்டார்கள். நானும் அதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் ஒரு காந்தியவாதியாக இருந்த போதிலும், முற்போக்குத் தன்மையில் நம்பிக்கையுள்ளவர். அதாவது, நாட்டிற்கு எது நலம் என்பதை உணர்ந்து, செயலாற் றும் ஒரு சிறந்த அரசியல் வாதி என்பதை நான் ஞாபகமூட்ட விரும்புகிறேன். 1939-ம் வருடத்தில் அகில-இந்திய காங்கிரஸ் தலைவர் தேர்தலுக்கு டாக்டர் பட்டாபியும், நேதாஜி சுபாஷ் சந்திர போஸும் போட்டியிட்டனர். அந்த சந்தர்ப்பத்தில் டாக்டர் அவர்கள் காந்தியவாதியாக இருந்தபோதிலும், அன்றைய கொள்கைக்கு ஏற்றவாறு, முற்போக்குத் தன்மைக்குத்தான் ஆதரவு அளிக்கவேண்டுமென்று கருதி, அவரும், அவரைச் சார்ந்த வர்களும் சுபாஷ் சந்திர போஸுக்கு ஆதரவு அளித்தனர். நான் இதைக் குறிப்பிடுவது, அவர் காந்தீயத்தை விட்டு விலகிவிட்டார் என்று எடுத்துக் காட்டுவதற்காக அல்ல. அன்றுள்ள பிரச்னையில் சமஷ்டியை எதிர்க்கவேண்டுமென்பதை அறிந்து, முற்போக்குக் கொள்கையை ஆதரித்தார் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். மேலும், அவர் கட்சி மனப்பான்மைக்கு அப்பாற் பட்டவர். எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அன்பு கனிந்த உள்ளத்தோடு அவர் அளவளாவுவார் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். சுமார் 30 வருஷ காலத்திற்கு முன்பிருந்தே, என்னை "தம்பி" என்றுதான்

அழைத்து வந்தார்கள். கடைசி வரையிலும் அவ்வாறுதான் அழைத்து வந்தார். அந்த முறையிலே அவர் ஒரு சிறந்த தேசிய வாதி, ஒரு சிறந்த நிர்வாகஸ்தர், சிறந்த மனிதத் தன்மை படைத்த பெரியவர், தமிழகத்திலே பெரும் கீர்த்தி வாய்ந்தவர் என்பதைப் பார்க்கும்பொழுது, நாம் எல்லோரும் உண்மையி லேயே அவரைப் பற்றிப் பெருமைப்படவேண்டும். அந்த முறை யிலே அவருடைய மரணத்திற்கு என்னுடைய ஆழ்ந்த அனுதா பத்தைத் தெரிவித்துக்கொண்டு, அவருடைய சிறந்த குடும்பத் தாருக்கும் எனது அனுதாபத்தை இந்த சந்தர்ப்பத்தில் தெரி வித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. க. ர. நல்லசிவம் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர் களே, கனம் டாக்டர் சுப்பராயன் அவர்களை நான் ஒரு சிறிய பையனாக இருக்கும்பொழுது தேர்தல் காலத்திலே சந்தித்திருக் கிறேன். அதற்குப் பிறகு அவர் இந்திய யூனியன் தபால் மந்திரி யாக இருந்த காலத்திலும், மகாராஷ்டிராவின் கவர்னராக இருந்த காலத்திலும் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. மனித ருக்குள் எல்லாம் ஒரு சிறந்த மனிதராக நாம் அவரை மதிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். தமிழ் நாட்டிலே டாக்டர் சுப்ப ராயன் அவர்கள் தமிழன் எப்படி இருக்கவேண்டுமென்பதற்கு ஒரு சிறந்த உதாரணமாக விளங்கினார் என்று சொல்ல முடியும். சிறந்த மனிதருக்குள் ஒரு பெரிய மனிதராக அவர் வாழ்ந்து வந்தார். அவருடைய வாழ்க்கையானது ஒரு அரசியல் வாதி எப்படி பல்வேறு கட்சிகளையும் அனுசரித்துக்கொண்டு, தன்னு டைய கடமையையும், தன்னுடைய குடும்பத்தையும் நடத்த முடியும் என்பதற்கு ஒரு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. இந்தியாவுக்கே ஒரு உதாரண புருஷர் என்று அவரைச் சொல்ல லாம். அப்பேர்ப்பட்ட ஒரு சிறந்த மனிதர், தமிழ் நாட்டைச் சேர்ந் தவர், அதிலும் குறிப்பாக, சேலம் ஜில்லாவைச் சேர்ந்தவர், கால மானது நமது தமிழ் நாட்டுக்கு பெருத்த நஷ்டமாகும். அதிலே எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. இப்படிப்பட்ட ஒரு சிறந்த தலைவர் காலமானதைக் குறித்து என்னுடைய கட்சியின் சார்பாக இரங்கலைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : By way of passing the resolution, I request hon. Members to stand in silence for a minute.

The resolution was carried *nem con*, all the Members standing in silence for a minute.

MR. SPEAKER : As a mark of respect to the memory of the late Dr. P. Subbaroyan, the House will now rise and reassemble at 2-30 p.m. today.

The House then adjourned.

(After Lunch 2-30 p.m.)